14th March 1960]

Press Council.

* 357 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government propose to form a Press Council for Madras; and

(b) if so, the manner and the purpose of its constitution?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) There is a proposal to form a Press Advisory Committee in the State and not a Press Council.

(b) This Committee is to be formed for safeguarding the rights of the Press in regard to freedom of publication of news and comments. The Convenor of the Committee is to be nominated by the Government in consultation with the President of the All-India Newspaper Editors' Conference who will, in turn, choose his colleagues in the Committee in consultation with the State Government. These details have not been finalised so far.

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், இந்த பிரஸ் அட்வைசரி கமிட்டி அமைப்பதற்காக நமது மாவட்டத்திலே இருக்கக்கூடிய முக்கிய பத்திரிகை நடத்துபவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரைக் கலந்து ஆலோசிக்கப்பட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்களைக் கலந்து ஆலோசித்துத்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

Depression in the Bay of Bengal

* 358 Q.—SRI A. VEDARATHNAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தின் அருகில் வங்கக் கடலில் அடிக்கடி காற்றழுத்தம் (depression) ஏற்பட்டு கடையோரப் பிரதேசங்களை பெரும் நாசத்திற்குள்ளாக்கி வருவதைப்பற்றி நிபுணர்களை அரசாங்கம் கலந்து ஆலோசித்ததா ? அவர்கள் கூறும் காரணம் என்ன ?

(ஆ) இதற்குப் பரிகாரம் ஏதேனும் செய்யக்கூடிய நிலை உண்டா ?

(இ) அப்படியானால் அதன் விவரம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (a) No, Sir.

(b) & (c) Do not arise.

SRI A. VEDARATHNAM : வங்கக் கடலில் இருக்கும் டெம்பரேச்சருக்கும், இந்து மகா சமுத்திரத்திலிருந்து வரும் காற்றுக்கும் 2 டிகிரி வித்தியாசம் இருக்கும் காரணத்தால் இந்த

[14th March 1960

டிப்ரஷன் அடிக்கடி உண்டாகிறது என்று நிபுணர்கள் கருதுகிறார்களா? அதைப்பற்றி ஆராய்ந்து அடிக்கடி இந்த வங்கக் கடலில் ஏற்படும் புயல் காற்று ஏற்படாவண்ணம் செய்ய அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN: எப்போது அந்த மாதிரி புயல் காற்று ஏற்படுகிறது என்று கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகையால் இதிலே அதிக கவனம் செலுத்தவில்லையென்று தெரிகிறது. எங்கெங்கு பாதிக்கப்படுகிறது என்று கவனித்து அரசாங்கம் ஆவன செய்து வருகிறது.

Indiscipline among hostel students.

* 359 Q.—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken to prevent students in some of the Government College Hostels like Madras Institute of Technology, Engineering College at Guindy and Coimbatore take to "*ragging*"?

THE HON. SRI C. SUBRAMANIAM: Ragging in Engineering Colleges has now been stopped by gradual persuasion. The Government have not received any complaint of ragging this year. As regards the Madras Institute of Technology, Chromepet, which is not a Government institution, the Director of Institute has reported that he put up a warning to students at the beginning of the year against excesses in this direction and that the students did not indulge in any excess.

SRI S. LAZAR: Sir, may I know from when this has been stopped? Because even at the commencement of the year, I received a number of complaints from the students. Is it not a fact that this is fast spreading to other Government colleges in the State—not only to private colleges? If so, will the Government take some more serious steps to stop this completely, because the new students are simply menaced by this kind of activity on the part of the students?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதில் சட்டம் போட்டோ வேறு நிர்ப்பந்தப்படுத்தியோ எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கை எதுவும் இல்லை என்பது என்னுடைய கருத்து. புதிதாக வரக்கூடிய மாணவர்களைத் தங்கள் கூட்டத்திலே சேர்த்துக் கொள்ளும் சமயத்தில் சில கலாட்டாக்கள் செய்வதுண்டு. 'இனிஷியேட்' பண்ணுவது என்று சொல்வார்கள். ஏதோ கேம்ப்ரிட்ஜ், ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடிகளில் இருப்பதாக நினைத்து நாமும் பின்பற்றினால் நம்முடைய தரம் உயர்ந்துவிடும் என்று நினைத்துக்கொள்கிறார்கள். இந்த இரண்டு வருஷங்களில் மிகவும் குறைந்திருக்கிறது. சென்ற வருஷ விளையாட்டை அதிகமாகப் பார்க்க வேண்டியதில்லை.